# TNPSC GROUP I முதல்நிலை தேர்விற்கான முக்கிய அறிவுரைகள்

# FROM THE DIRECTOR'S DESK

அப்பல்லோ பயிற்சி மையத்தில் TNPSC Group I முதல்நிலை தேர்வுக்கு பயின்ற தேர்வர்களுக்கு வகுப்புகளுடன் பின்வரும் தேர்வுகளும் நடத்தப்பட்டுள்ளன.

1. வகுப்பறை தேர்வுகள்
2. Reference Hall தேர்வுகள்
3. Test Batch தேர்வுகள் (25 தேர்வுகள்)
4. ஊரடங்கு கால தேர்வுகள் (9 தேர்வுகள்)
5. மீள்பார்வை தேர்வுகள் (19 தேர்வுகள்)

பாடத்திற்கு ஏற்ப பல்வேறு வகையான 8475 வினாக்கள் மேற்கூறிய தேர்வுகளில் கேட்கப்பட்டன. இவ்வினாக்கள் தேர்வர்கள் முதல் நிலை தேர்வினை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உதவிபுரியும்.

தேர்விற்கு முன்னர் கடைபிடிக்க வேண்டிய சில நடைமுறை ஆலோசனைகள் பின்வருமாறு:

**செய்ய வேண்டியன:**

- புதிதாக எதையும் படிக்க வேண்டாம்
- ஏற்கனவே படித்த பாடங்களை, குறிப்புகளை மீள்பார்வை செய்யவும்
- முந்தைய ஆண்டுகள் நடைபெற்ற TNPSC தேர்வுகள் வினாத்தாள்கள் மற்றும் அப்பல்லோவில் நடைபெற்ற மேற்கூறிய 5 வகையான தேர்வு வினாக்களையும் மீள்பார்வை செய்யவும்.

**தேர்வுக்கு முதல் நாள் செய்ய வேண்டியன**

- விரைவான மீள்பார்வை செய்யவும்
- மனரீதியாக வலிமையுடன் தேர்வினை எதிர்கொள்ள தயாராகுங்கள்
- மூளைக்கு சற்று ஓய்வு கொடுங்கள்

* உங்களுக்கு பிடித்தமான முறையில் உங்கள் மனதினை தளர்வு படுத்துங்கள்
* இரவு முழுவதும் கண்விழித்து படிப்பதை தவிர்க்கவும்
* 6 முதல் 7 மணி நேரம் ஆழ்ந்த உறக்கம் தேவை

**தேர்வு நாளன்று**

* நுழைவுச்சீட்டு, கருப்பு பந்து முனை பேனா போன்றவற்றை மறக்காமல் எடுத்துச்செல்லவும்
* காலை சிற்றுண்டியை தவிர்க்க வேண்டாம்
* குறைந்தபட்சம் 1 மணி நேரத்திற்கு முன் தேர்வு மையத்தை சென்றடையவும்
* தேர்வுக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு படிப்பதை நிறுத்துங்கள்
* கடைசி நேரப்படிப்பு என்பது குழப்பத்தையே விளைவிக்கும்
* மற்றவர்களுடன் கலந்து பேசாமல் தனிமையைக் கடைப்பிடியுங்கள்
* கண்களை மூடி அமைதிப்படுத்துங்கள்
* எல்லாம் மறந்த மாதிரி இருக்கிறதே என்று நினைத்துக்குழம்பாதீர்கள்
* நன்றாக மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுங்கள் - சீரான மூச்சு உங்களை தைரியப்படுத்தும்; உற்சாகப்படுத்தும்; நீங்கள் தெளிவுடன் இருக்கலாம்
* நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று எண்ணித் தேர்வை எழுதத் தொடங்குங்கள்

# நினைவில் கொள்க

## செல்லுபடியாகாத விடைத்தாள்

- ❖ கொடுக்கப்பட்டுள்ள A, B, C, D, E என்ற வட்டத்திற்குள் ஏதேனும் ஒன்றை நிரப்ப வேண்டும். விடை தெரியாத வினாவிற்கு E என்ற வட்டத்தினை நிரப்ப வேண்டும். ஏதேனும் வட்டங்கள் நிரப்பப்படாமல் விடுபட்டால் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
- ❖ ஒரே வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களை நிரப்பினாலும் விடைத்தாள் செல்லுபடி ஆகாது.
- ❖ அனைத்து வினாக்களுக்கும் விடையளிப்பது கட்டாயம்

## ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

- ❖ விடைத்தாள் பிரிவு IIIஇல் எத்தனை As, Bs, Cs, Ds மற்றும் Es விடையாக குறித்துள்ளீர்கள் எனக்கணக்கிட்டு மொத்த எண்ணிக்கையினை அதற்குரிய கட்டத்தில் எழுதுவதுடன் அதற்குரிய வட்டங்களை நிரப்ப வேண்டும். தவறு இருப்பின் ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

## வட்டங்களை நிரப்பும் போது கவனம் தேவை

- ❖ விடைத்தாளில் Dக்கான வட்டத்தை நிரப்ப முயலும்போது தவறுதலாக இறுதியில் உள்ள E வட்டத்தை நிரப்ப நேரிடும். எனவே கவனம் தேவை.

## வினாத்தாளில் தேவையற்ற குறிப்புகளை எழுதுவதோ, குறியீடுகள் செய்வதோ கூடாது

# விடையளிக்க பன்னிரெண்டு கட்டளைகள்

## வினாத்தாளினை அணுகும் முறை

- ❖ தேர்வு அறையினுள் அறை மேற்பார்வையாளர் விடைத்தாளினை அளித்தவுடன் தங்கள் பெயர், பதிவு எண், தேர்வின் பெயர், கையொப்பம் ஆகிய பகுதிகளை நிதானமாக பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

- ❖ வினாத்தாளினை பெற்றவுடன், வினாத்தாளின் பக்கங்கள் மற்றும் கேள்வி எண்கள் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். ஏனெனில் ஏதேனும் குறைப்பாடு இருப்பின் உடனே அறை மேற்பார்வையாளரிடம் தெரிவித்து வேறு வினாத்தாளினை பெற இயலும். வினாத்தாளில் உள்ள வரிசை எண்ணை விடைத்தாளில் அளிக்கப்பட்டுள்ள தகுந்த இடத்தில் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

- ❖ விடைத்தாளினை பூர்த்தி செய்தபின், உங்களுக்கு நன்றாக படித்த பாடப்பிரிவுகளில் உள்ள வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கலாம்.

**கேள்விகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் வழியில் கேட்கப்படும். தமிழ் வழியில் வினாவை படித்து விடையளிக்கும் தேர்வாளர்கள் தமிழ் வழிக் கேள்வியில் ஏதேனும் சந்தேகமோ அல்லது பிழையாக இருப்பதாக உணர்ந்தால் ஆங்கில வழி கேள்வியினை படித்து பின்பு விடையளிக்க வேண்டும் ஏனெனில் ஆங்கில வழியில் கேட்கப்பட்டுள்ள கேள்வி பதிலே இறுதியானது.**

- ❖ வினாவினை படித்தப்பின்பு அதற்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்து Option களையும் நன்கு படித்த பின்பே விடைக்கான Option–ஐ தேர்வு செய்யவேண்டும்.

- ❖ வினாக்களைப் படித்து வினாவிற்கு விடை தெரியுமாயின் விடைத்தாளில் விடையினை குறிக்கும் பொழுது மீண்டும் ஒரு முறை வினா எண்ணும், விடைத்தாளில் உள்ள வரிசை எண்ணும் ஒன்றாக உள்ளதா என்பதை அறிந்து பின்னர் குறிக்க வேண்டும்.

- ❖ குழப்பமான வினாக்களுக்கு உடனே பதில் அளிக்காமல் அடுத்த வினாவிற்கு பதில் அளிக்க முயற்சி செய்யவேண்டும். ஏனெனில் முந்தைய குழப்பமான வினாவிற்கான விடை பின்பு வரும் கேள்விகளை படிக்கும் பொழுது உங்கள் நினைவிற்கு வர வாய்ப்புள்ளது.

- ❖ வினாவினை படித்து வினாவிற்கான விடையை உடனே விடைத்தாளில் குறித்து விட வேண்டும். கடைசியாக குறிக்கும் பழக்கம் ஆபத்தானது. ஏனெனில் விடைத்தாளில் விடையினை குறிப்பதற்கு போதுமான கால அவகாசம் இறுதியில் இல்லாமல் போய்விடும்.

- ❖ கணித வினாக்களுக்கு தனியாக விடையளிக்கவும். சில வினாக்கள் நேரம் எடுப்பின் அதனை தவிர்த்து மற்ற வினாக்களுக்கு செல்லவும்.

- ❖ தெரியாத வினாக்களுக்கு முதலில் மனதில் தோன்றும் விடையையே தேர்வு செய்தல் நன்று என்பது உளவியலாளர் கூற்று.

- ❖ கூற்று காரணம் வினாக்களுக்கு மிக கவனமாக விடையளிக்கவும்.

- ❖ அறை அதிகாரியுடன் பணிவாக நடந்துகொள்ளவும்.

**வாழ்த்துக்களுடன்**
**இரா. சாம் இராஜேஸ்வரன்**
**இயக்குநர்**
**அப்பல்லோ பயிற்சி மையம், சென்னை**